தென்னிந்திய
திரைக் கலைஞர்கள்
கலந்துகொள்ளும்
கலையமுதம்
யாழ் துரையப்பா
விளையாட்டரங்கு
22-2-1980
மாலை ஆறுமணிக்கு
டிக்கட்
ரூ. 50, 25, 10, 5.

பக்கங்கள் 8

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-2-19
PERIODICALS
DIVISION
LIBRARY

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

மலர் 22 மாசி 7 ரபி-ஆகி 2 இதழ் 9
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-2-80

நாகேஷ்
ஜெய்சங்கர்
அசோகன்
கலந்துகொள்ளும்
கலையமுதம்
புதுமைக்
கதம்ப நிகழ்ச்சி



# "மீண்டும் வருவோம்"!





# எம்.ஜி.ஆர். கூறுகின்றார்

## தமிழ்நாட்டில் கலவரம்; வன்செயல்!
## 100பேர் கைது; தபாலகம் தீவைக்கப்பட்டது!

(சென்னை)

**தமிழ்நாடு சட்டசபை நேற்று கலைக்கப்பட்டு, ராஷ்டிரபதி ஆட்சி அமுல் செய்யப்பட்ட அதே நேரத்தில்; தமிழகத்தில் நேற்று பரவலாக வன்செயல்கள், கலவரங்கள் இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றுப் பகல்வரை நிகழ்ந்த கலவரங்கள் தொடர்பாக நூறுபேர் கைது செய்யப்பட்டனர். கோயம்புத்தூரில் தபால் நிலையமொன்றுக்கு தீவைக்கப்பட்டது.**

### எம். ஜி. ஆர். கருத்து

தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"மற்றொரு அநீதியை முன் உதாரணமாகக் காட்டி ஒரு அநீதி இப்பொழுது இழைக்கப்பட்டுள்ளது. நடைபெறப்போகும் தமிழகசட்டசபைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. கழகம் நிச்சயம் வெற்றிபெற்று, மீண்டும் பதவிக்கு வரும். இதனை; இன்று எம்மைக் கலைத்தவர்கள் உணரத்தான்போகின்றார்கள். தமிழகசட்டசபையைக் கலைத்ததன் மூலம், ஜனநாயகம் இப்பொழுது சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏழு ஆண்டுகள் பதவியில் இருந்தவர்கள், தங்களின் தவறான செயல்களினால் பதவியை இழந்துவிட்டு, இன்று அ. இ. அ. தி. கழக' அரசு பதவிநீக்கம்செய்யப்பட்டதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்திருக்கின்றனர். அ. இ. அ. தி. மு. கழகத்தின் செயற்குழுவும், பொதுக்குழுவும் இம்மாதம் 23, 24ம் திகதிகளில் கூடி, முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும்" என்று திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கருத்துவெளியிட்டுள்ளார்.

### ஜன நாயக விரோதமானது

"ஒன்பது மாநில அரசுகளையும் மத்திய அரசு கலைத்திருப்பது ஒரு ஜனநாயக விரோதமான செயலாகும்" என்று மேற்கு வங்காள முதன் மந்திரி நேற்று கருத்து வெளியிட்டார். "மாநில அரசுகளைக் கலைத்திருப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது" என்று லோக்தள் (மக்கள் கட்சி) தலைவர் திரு. சரண்சிங் கருத்து வெளியிட்டுள்ளார். "ஆளும் கட்சியின் மகாதவறு இது" என்று அர்ஸ் காங்கரஸ் தெரிவித்துள்ளது. "இந்த முடிவு முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுதான்" என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கருத்து வெளியிட்டுள்ளார். "மாநில அரசுகள் கலைக்கப்பட்டது ஒரு ஜனநாயக விரோதமான செயலாகும்" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவி திருமதி பார்வதி கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் கருத்து தெரிவிக்கையில் "1977-ல் ஜனதா செய்ததை இப்பொழுது திருமதி இந்திராகாந்தி செய்துள்ளார்" என்று கூறியுள்ளார்.

### பொற்காலம் வருகிறது

பார்வேர்ட்புளக் தலைவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்; ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் ஒரு பொற்காலம் வரப்போகிறது என்று கூறினார். "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கருத்திற்கொண்டு மாநில சட்டசபைகள் கலைக்கப்பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்க விஷயம்" என்று இந்திய குடியரசுக் கட்சி தமிழ் மாநிலப் பிரிவுத் தலைவர் திரு. முருகையன் கருத்து வெளியிட்டுள்ளார். திராவிடர் கழகச் செயலாளர் திரு. வீரமணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் "தமிழக சட்டசபை கலைக்கப்பட்டது எதிர்பாராத சம்பவம் அல்ல. லோகசபைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்கிணங்க, அன்றே திரு. எம். ஜி. ராமச்சந்திரன் விலகியிருந்தால் இப்படியானதொரு நிலைமை தோன்றியிருக்காது" என்று தெரிவித்துள்ளார்.

### கலைஞர் கருணாநிதி கருத்து

தி. மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி புதுடில்லியில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துவிட்டு நேற்று சென்னை திரும்பினார். பத்திரிகைநிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:

"தமிழக சட்டசபை இப்பொழுது கலைக்கப்பட்டுள்ளது. இது ஒன்றும் அதிர்ச்சிதரும் விஷயமல்ல. லோகசபைத் தேர்தலின்போதே மக்கள் தெளிவான தீர்ப்பை அளித்துவிட்டனர். மக்கள் தீர்ப்புக்கு மதிப்பு வைப்பதாக இருந்தால், தோல்வியைத் தழுவிய அந்த நிமிடத்திலேயே ராஜினாமாவை சமர்ப்பித்திருக்க வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

இன்ஸ்பெக்டர்மீது துப்பாக்கிச்சூடு:

# மூவர் கைது;

## இருவர் தலைமறைவு

(நமது மட்டக்களப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி - கொக்கட்டிச்சோலை - மணற்பிட்டி கிராமத்தில் கந்தப்போடியைத் தேடிச்சென்ற களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. க. பத்மநாதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகத் தேடப்பட்டுவந்த உழவுஇயந்திர சாரதியும், உரிமையாளரும் தலைமறைவாகிவிட்டனரெனவும் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு பிரபல கேடி கந்தப்போடி, கொக்கட்டிச்சோலையிலுள்ள மணற்பிட்டி என்னுமிடத்திலுள்ள வயல்வாடியொன்றில் தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பத்மநாதன் உட்பட நான்கு பேர் அடங்கிய குழு அங்கு சென்றபோது வயல்வாடியிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் பொலிசாரை நோக்கிவந்ததாகவும் அப்போது பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பத்மநாதன் மீதும் சூடு விழுந்ததாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான எம். சங்கரப்பிள்ளை, ஏ. கந்தப்புலி, எஸ். சவரிமுத்து ஆகியோர் நேற்று மட்டக்களப்பு இன்ஸ்பெக்டர் திரு. வி. ஏ. கிருஷ்ணராஜாவினால் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பொழுது, தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளும்வரை சந்தேகநபர்களைவிளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மேலும் கந்தப்போடி வந்ததாகக் கருதப்படும் உழவு இயந்திரத்தின் உரிமையாளர் அப்துல் மஜீத் என்பவரும் அந்த உழவு இயந்திரச் சாரதி எம். கதிர்காமப் போடியும் தலைமறைவாகிவிட்டனர்.

இவர்களைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

இதுதொடர்பான விசாரணையை மட்டக்களப்பு இன்ஸ்பெக்டர் திரு. வி. ஏ. கிருஷ்ணராசா தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றார்.

# ஆனமடுவ எம்.பி. பதவியிழந்தார்!

## மேன்முறையீடும் நிராகரிப்பு

[கொழும்பு]

ஆனமடுவ எம். பி. திரு. சந்தா திஸ்ஸ வடிவமங்காவ கடந்த பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியற்றது என்று மேல்முறையீட்டு நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.

தெரிவு செல்லுபடியற்றது என்று தேர்தல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து திரு. வடிவமங்காவ செய்திருந்த மேன்முறையீட்டையே நீதியரசர்கள் நிராகரித்தனர்.

இவரது மேன்முறையீட்டை பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன், நீதியரசர்கள் இஸ்மோதரம்' வனசுந்தரா, ஆகியோர் கடந்த டிசம்பர் 5-ந் திகதியிலிருந்து தொடர்ந்து விசாரணை செய்து வந்தனர்.

திரு. வடிவமங்காவையின் தெரிவு செல்லுபடியற்றது என்று திரு. உபாலி குணவர்த்தன, ரஞ்சன் ரணசிங்க ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனுமீது விசாரணை நடாத்திய தேர்தல் நீதிமன்றம் லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் மீது அவரதுதெரிவு செல்லுபடியற்றது என்று தீர்ப்பளித்திருந்தது. இதனை எதிர்த்தே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

திரு. வடிவமங்காவ சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

[கு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எங்களிடம் நல்ல நிலையுள்ளதும் அதிக காலம் பாவனையில்லாமலுமுள்ள ராக்டரும் பெட்டியும், கலப்பையும் விற்பனைக்குண்டு, தேவைப்படுவோர் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்புகொள்ளவும். Tractor No. 36 ஸ்ரீ 2448, Trailor 44 ஸ்ரீ 8056 தொடர்புகொள்ளவேண்டிய விலாசம் ஏ. எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ், பிரதானவீதி, ஊர்காவற்றுறை. 4969

கல்வியங்காடு விளையாட்டு அரங்கு வீதியில், வீதி ஓரமாக 9½ பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய மூகவரி:- பொ. சி. அன்னலிங்கம், புலவனுர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 4987

25 அடி மின்சாரக் கொங்கிறீட் தூண். N. சிவசுப்பிரமணியம் "சந்திரா" இணுவில் தெற்கு. 4997

FOR SALE
Famous - Suvega Deluxe Moped Motor Cycle (New) 200 Miles per gallon. Jeyapalan, 28, Main Street, Jaffna. 4986

### தேவை

சோப் (புதிய உற்பத்தி) தயாரிப்பதில் நன்கு அனுபவமுள்ள ஆண் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும். இ. ராஜா, 196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 4991

## வேலைக்குத் திரும்பினர்

(மன்னுர்)

முருங்கன் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

பொருட்களை ஏற்றி இறக்கும் கட்டணம் 2 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்பட வேண்டுமென்று கோரியே இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது. இவர்களது கோரிக்கை நிறைவேறியதால் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இவ்வேலை நிறுத்தத்தால் முருங்கன் உணவுக் களஞ்சியத்திற்கு பொருட்களை ஏற்றி இறக்கும் வேலைகள் பாதிப்படைந்திருந்தது. முருங்கன் புகையிரத நிலையத்தில் புகையிரத மூலம் வந்திருந்த மாமூடைகள் அப்புறப்படுத்த முடியாதநிலைஏற்பட்டிருந்தது.

தொழிலாளரது கோரிக்கை நிறைவேறியதால், இப்போது பொருட்களை ஏற்றி இறக்கும் வேலைகள் வழமையான நிலைக்கு திரும்பியுள்ளது. (க)

## ஜீப் விபத்தில் ஒருவர் பலி

(மன்னுர்)

மன்னுர்—வங்காலை என்னுமிடத்தில் ஜீப் வண்டியொன்று தடம்புரண்டதால் ஒருவர் ஸ்தலத்திலேயேபலியானுர். நால்வர் பலத்த காயங்களுடன் மன்னுர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நால்வருள் இருவரின் நிலை மிகவும் மோசமானதாக இருந்ததால் இருவரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் இருவர் பெண்களாவர். வவுனியா பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. கே.மகேந்திரன் என்பவரே ஸ்தலத்தில் பலியானவராகும். (க)

## நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை வாடிவீடு பேணுதல் விடுதிக்காக ஊர்காற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் சிபார்சின் பேரில் 75,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது,

வாடிவீட்டு வீதிவேலைக்குப் 25,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க)

ஷாவை விசாரிக்கும் ஆணைக்குழுவில்

# இலங்கைப் பிரதிநிதியாக ஜெயவர்த்தன நியமனம்!

நியூயோர்க், பெப். 18

ஈரானிய முன்னுள் மன்னர் ஷா புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்களை விசாரிப்பதற்கென ஐக்கியநாடுகள் சபை நியமிக்கவுள்ள சர்வதேச விசாரணைக் கமிஷனில் இலங்கையும்இடம் பெறவுள்ளது.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட இவ்விசாரணைக் கமிஷனின் இலங்கைப் பிரதிநிதியாக திரு. எச். டபிள்யு.ஜெயவர்த்தன கியூ. ஸி, ஐ. நா. சபையினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளையில்; சர்வதேச விசாரணைக்கமிஷன் நியமிப்பதை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆணைக்குழு தொடர்பாக உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லையாயினும் அதனை அறிவிப்பதற்கு முன்னர் ஈரானின்அபிப்பிராயத்தை ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் கமிஷனில் அங்கம் வகிக்கவிருந்த பங்களாதேஷ்பிரதிநிதி ஜனுப் அபுசாலி திடீர் சுகவீனமுற்றதாலேயே அவரது இடத்திற்குப்பதிலாக இலங்கை பிரதிநிதி திரு. ஜெயவர்த்தன தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (கு)

## நீர்வளம் பற்றி ஆய்வு

(மன்னுர்)

மன்னுரிலிருந்து புத்தளம் வரையுள்ள பேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கும் இதர உணவு அபிவிருத்தித் திட்டங்களை பெருக்குவதற்கும் தேவையான நீர்வளங்களைக் கண்டறியும் பொருட்டு மன்னுரில் நீர்வளம் பற்றிய ஆய்வு ஒன்று நடைபெறவுள்ளது.

புத்தளத்திலிருந்து மன்னுர் வரை இந்த ஆய்வினை மேற்கொள்ள கடல் கடந்த நாடுகளுக்கான அபிவிருத்திச் சபை முடிவு செய்துள்ளது. ஏப்ரல் மாதம் இந்த ஆய்வு ஆரம்பமாகும்.

இத்தகவலை மன்னுர் விவசாய விரிவாக்க அதிகாரி ஜனுப். எம். சி. எம். முஸ்தபா தெரிவித்தார். (க)

சுன்னுகம் ப. நோ. கூ: ச.

## 4 லட்சத்து 91 ஆயிரம் ரூபா நிகரலாபம்!

[சுன்னுகம்]

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் 1978-79 நிதியாண்டில் 4லட்சத்து 91 ஆயிரம் ரூபாவை நிகரலாபமாகப் பெற்றுள்ளது.

முன்னுள் தலைமைக்காரியாலய கூட்டுறவுப்பரிசோதகரும் இயக்குநர்சபைத்தலைவருமான திரு. க. சரவணமுத்துவின் தலைமையில் இயங்கும் இயக்குநர் சபையின் திறமையான நிர்வாகமும், பொது, நுகர்ச்சி முகாமையாளர்கள், ஊழியர்களின் ஒத்துழைப்புமே இதற்கான காரணங்களாகுமென இப்பகுதிமக்கள், பாவனையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் சிபார்சின்மீது நியமிக்கப்பட்ட இயக்குநர்சபை அங்கத்தவர்களே இதில் பெரும்பான்மையானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## புங்குடுதீவு கமத் தொழிற்சேவை நிலையம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கமத்தொழில் சேவை நிலையம் விரைவில் திறக்கப்பட விருப்பதாக ஊர்காவற்றுறை எம்.பி,பண்டிதர் க.பொ.இரத்தினம் நேற்று தெரிவித்தார்.

இதற்கென பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவு திட்டத்தில் 78 ம் ஆண்டு தான் பணம் ஒதுக்குவதாகவும் அவர் கூறினுர். (க)

## மன்னுர் பாதைகளை சீராக்க நடவடிக்கை

(மன்னுர்)

மன்னுர் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் அண்மையில் மூதூர் எம்.பியும் மன்னுர் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். ஈ.எச். மஹ்ரூப் தலைமையில் மாவட்ட அமைச்சில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மன்னுர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் மன்னுர் அரசாங்க அதிபர். திரு. கமிலஸ் பெர்ணுண்டோ திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மன்னுருக்கு வரும் ஒவ்வொருவரும் மன்னுர் பாதைகள் படுமோசமாக இருப்பதாக முதலில் என்னிடம் கூறுகிறுர்கள் என்று மன்னுர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் கூறினுர். இதற்குப் பதிலளித்த மன்னுர் மாவட்ட அமைச்சர் ஜனுப். எம். ஈ. எச். மஹ்ரூப் மன்னுர் பாதைகளை துரிதகதியில் செப்பனிடு மாறு பொறியியலாளரைக் கேட்டுக்கொண்டார். மன்னுர் புதிய பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடைபெறும்என்றும் இதில் போக்குவரத்து அமைச்சர் கலந்து கொள்வார் என்றும் அவர் சொன்னுர்.

மன்னுர் அரசாங்க ஊழியர்கள் யாழ்ப்பாணம் செல்ல வார இறுதியில் மாலை பஸ் சேவை ஒன்றை நடத்த வேண்டும் என்றும் அதேபோல் ஒவ்வொரு திங்கட் கிழமையும் அரசாங்க ஊழியர்கள் காலை 8 மணிக்கு மன்னுர் வரக்கூடியதாக பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்றும் ஆலாசனை கூறப்பட்டது. இதற்கு ஆவன செய்யுமாறு போக்கு வரத்து அதிகாரிகள் கேட்கப்பட்டனர்,

இதற்கிணங்க ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை 3-45 மணிக்கு மன்னுர் கச்சேரியிலிருந்து சங்குப்பிட்டிக்கும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சங்குப்பிட்டியில் இருந்து மன்னுருக்கு காலை 6 மணிக்கும் பஸ் சேவை நடைபெறுமெனக் கூறப்பட்டது.

மன்னுர் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு குளிரூட்டப்பட்ட பெட்டிகள் கிடைத்திருப்பதாகவும் அவற்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மன்னுர் ஆஸ்பத்திரிக்கு குழந்தை வைத்தியத்தில் விசேடத்துவம் பெற்ற வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் இங்குள்ள வைத்தியர்கள் தங்க வீடுவசதிகள் அளிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க)

## நடு வீதியில் கற்கள்

(மன்னுர்)

மன்னுர் பட்டின வீதிகளைத் திருத்துவதற்கென 2 மாதங்களுக்கு முன் வீதி ஓரங்களில் கற்கள் குவிக்கப்பட்டிருந்தன. ஆனுல், இதுவரையும் வீதிகள் திருத்தப்படவில்லை.

வீதியோரங்களில் குவிக்கப்பட்டிருந்த கற்கள் இப்போது நடு வீதிக்கு வந்து விட்டன. இதனுல் வாகனங்கள் போக்குவரத்திற்கும்பாதசாரிகளுக்கும் பெரும் டையூருக இருக்கிறது. (க)

## ராமாயண உபந்யாசம்

(யாழ்ப்பாணம்)

ஓமந்தை வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தில் மாசி மகத் திருநாளை முன்னிட்டு நடைபெறும் ராமாயண சுதாகாலட்சேப உபந்யாசத்தை வே. த. மயில்வானம் சாஸ்திரியார் தொடர்ந்து 11 நாட்கள் நிகழ்த்துவார்.

நாளை புதன்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 1-ம் திகதிவரை இவ்வுபந்யாசம் நடைபெறும். (கு)

## மன்னுரில் ஹனிபாவின் கச்சேரி

(மன்னுர்)

மன்னுர் புதிய பஸ் நிலையத்தில் நடைபெற்ற மீலாத் விழாவில் தமிழகத்தைச் சேர்ந்தவரும் தென்னிந்திய திரைப்பட இஸ்லாமிய பின்னணிப் பாடகருமான இசை நாகூர் ஈ. எம் ஹனிபாவின் இலவச இசைக் [illegible] டை பெற்றது.


கட்டைவேலி கிராமாட்சி மன்றம், அல்வாய்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சேவைகளை வழங்க முன் வருவோரிடமிருந்து இக்கிராமாட்சி மன்றத்தில் பதிவு செய்வதன் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்துவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவஞ்சல் மூலம் அல்லது நேரில் 80-03-04-ந் திகதிக்குப் பிந்தாமல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

| சேவைகள் | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|
| 1. அச்சிட்ட படிவங்கள் காகிதாதிகள் விநியோகித்தல் | ரூபா 10-00 |
| 2. அலுவலக தளபாடங்கள் உபகரணங்கள் விநியோகித்தல் | ரூபா 10-00 |
| 3. சுகாதார சேவைக்குரிய உபகரணங்கள் விநியோகித்தல் | ரூபா 10-00 |
| 4. தட்டச்சு இயந்திரம், இரட்டித்தல் இயந்திரம் திருத்துதல், பழுது பார்த்தல் | ரூபா 10-00 |
| 5. கட்டிட வேலைகள், வீதி வேலைகள் ஒப்பந்தம். | |
| (அ) ரூபா 10000/-ற்குக் கீழ் | ரூபா 10-00 |
| (ஆ) ரூபா 25000/- வரை | ரூபா 15-00 |
| (இ) ரூபா 25000/- வரையும் அதற்கு மேலும் | ரூபா 25-00 |

பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து மாத்திரமே கேள்விகள் கோரப்படுமாயினும், தகுந்த காரணங்களை முன்னிட்டு சபை விரும்பியவர்களிடமிருந்து கேள்விகள் கோரும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

சபையின் திருப்திக்கேற்றவாறு தமது சேவைகளை வழங்காதவர்களின் பதிவுகள் எதுவித மேலறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்

ஆ. குணநாயகம்
விசேட ஆணையாளர்,
கட்டைவேலி கிராமாட்சி மன்றம்,
அல்வாய்.

கிராமச்சபை அலுவலகம்,
அல்வாய், 15-2-80.

4998



## தேவை

"ஈழநாடு" அச்சகத்தில் பணிபுரிவதற்கு நாட் சம்பள அடிப்படையில் தற்காலிக அச்சு இயந்திர இயக்குநர் தேவை. கல்வி, தொழிற் தகைமை, வயது, அனுபவம், முதலிய விபரங்களுடன்

24-2-80-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்

பொதுமுகாமையாளர்;
ஈழநாடு லிமிட்டெட். த.பெ. இல 49.
யாழ்ப்பாணம்.

4996


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒரு கருமத்தைச் செய்து ஒப்பேற்றுவதற்கு மேற்கொள்ளும் வழிவகைகளைப் பற்றி யாம் கவனமாயிருந்தால் அதன் முடிவும் தன்னைத்தானே கவனிக்கும், இதையே வழிவகைகளுக்கும் முடிவுக்கும் வித்தியாசமில்லை யென இன்னொருவகையிற் கூறலாம்.

— மகாத்மாகாந்தி

### மக்கள் கருத்து

## யாழ். நகரின் இன்றையநிலை

யாழ்ப்பாண மாநகரம் இன்று தன் சோபையை இழந்து அவலட்சணமாகக் காட்சிதருகின்றது. இதுவரையான காலங்களிலும் பார்க்க இப்பொழுது மிகமோசமான நிலையை எதிர்நோக்கியுள்ளது.

முதலில் யாழ்நகரில் வீதிகளின் அவலநிலை மிகப் பரிதாபத்துக்குரியது. எத்தனையோ மக்கள் இதனை எடுத்துரைத்தும், பத்திரிகை வாயிலாக வேண்டுகோள் விடுத்தும் பயனளிக்கவில்லை. கஸ்தூரியார் வீதி ஆரம்பத்தில் இருந்து வின்சர் படமாளிகைவரையும், நாவலர் வீதி கஸ்தூரியார் வீதி சந்தியில் இருந்து யாழ். இந்துக் கல்லூரி வரையும், இதற்கு எடுத்துக்காட்டு.

புகார்கள் கிடைத்தவுடன் அதனை உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டியது மாநகர சபையின் பொறுப்பு. ஆனால் புகார் மீது நடவடிக்கை எடுத்தாலும் உண்மையிலே என்ன நடைபெறுகிறது? யாழ். நாவலர் வீதியிலுள்ள கடையிற் சுவாமி ஒழுங்கைக்கு சில தினங்களுக்கு முன்னர் வீதியை முக்கால் பங்குமூடி கற்களைப்பதித்தார்கள். அதற்குமேல் என்ன நடந்தது என்றால் ஒன்றுமேயில்லை. முன்பு அப்பக்கத்தால் சென்று திரும்பிய துவிச்சக்கர வண்டிகள் இப்போது உள்ளே போகமுடியாதநிலை. இன்றும் அந்தப் பரிதாபத்துக்குரிய வீதி அப்படியே இருக்கிறது.

வீதிதான் இப்படி என்றால் வீதிகளில் எரியும் மின்சார பல்புகள்கூட எரிவதில்லை. புகார்களை அனுப்பினாலும் ஏதாவது சாக்குச் சொல்லி மன்னிப்புக் கோருவார்கள். உண்மையிலேயே நான்கைந்து தடவைகள் எடுத்துச் சொன்னாலே பல்புகள் மாற்றப்படுகின்றன.

சீன விஜயத்துக்கு மாநகர சபை முதல்வர்களை அழைத்துச் சென்றவர்கள் ஏன் அங்குள்ள முதல்தர ரோட்டுக்களைக் காண்பிக்கவில்லை?

விசேஷ ஆணையாளர் இருந்த காலத்திலே முக்கியமான சந்திகளில் பூந்தொட்டி அமைத்தும், வண்ண நீர் பாய்ச்சியும் நகரை அழகுறச் செய்தார்கள். சில இடங்களில் அதன் வேலைகள் ஆரம்பிக்குமுன் தற்போதைய சபை பொறுப்பேற்றுக் கொண்டது. ஆயினும் அவற்றைத் தொடர்ந்துமுடிக்காமல்விட்டது ஏன்? முன்பு ஆணையாளரிடம் இத்தகைய குறைபாடுகளைப் பத்திரிகை வாயிலாக எடுத்துச் சொன்னால் உடனேயே தகுந்த விளக்கமோ அல்லது நடவடிக்கையோ எடுக்கப்படும் ஆனால் இம்முறை இப்போது பின்பற்றப்படுவதில்லை. இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா?

ந. சூரியநாராயணன்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

---

### "தமிழ்மக்கள் போராட்டம் நடாத்தியபோது

# உன்னிப்பாகக் கவனித்து

## அறிவுரை வழங்கியவர் அண்ணா"

### -- யாழ். எம். பி.

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்கள் எங்கு போராட்டம் நடாத்தினாலும் அதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, அப்போராட்ட வீரர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கியவர் பேரறிஞர் அண்ணா. அதனால்தான் உலகத் தமிழ்த் தலைவராக மதிக்கப்படுகிறார்."

இவ்வாறு யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரன், குருநகர் அண்ணா சிலை முன்பாக நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

1956ம் ஆண்டு இலங்கையில் தனிச் சிங்களச் சட்ட மசோதா நிறைவேற்றப் பட்டபோது, லண்டனில் கல்வி கற்றுக் கொண்டிருந்த நான், லண்டனில் இலங்கை அரசுக்கு எதிராக ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினேன். அதை அறிந்த அறிஞர் அண்ணா எமக்கொரு கடிதம் அனுப்பியிருந்தார். உலகத்தில் உள்ள எல்லாத் தமிழர்களும் எம்மைப் போற்றுவர் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

"இந்தியாவில் இந்திரா ஆட்சி அமைத்ததன் மூலம் கிழக்காசியாவில் குறிப்பாகத் தமிழினத்திற்கு நல்லதோர் அரசியல் சூழ்நிலை உருவாகி வருவதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

"இன்று மக்கள் மத்தியில் செல்வாக்குடைய அரசியல் கட்சிகளும் நாளை மக்களால் தூக்கி எறியப்படலாம். ஆனால் இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமை அவசியம். இளைஞர்களின் ஒன்றுபட்ட சக்தியால்தான் எதையும் சாதிக்கமுடியும்."

அனைத்து இலங்கை அ. தி, மு. க., அனைத்து இலங்கை எம். ஜி. ஆர். மன்றப் பொதுச் செயலாளருமான ஜனாப் ஏ. நெய்னார் பேசுகையில், "பெரியாருடைய சீர்திருத்தக் கருத்துகளினால்தான் தமிழ்மக்கள் மத்தியில் புரையோடிக்கிடந்த பல அறியாமைகள் அகற்றப்பட்டன. சாதிவெறி ஒழிக்கப்பட்டது. சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன.

"1958ம் ஆண்டு இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டு, தமிழ்மக்கள் தாக்கப்பட்டபோது, தமிழகத்தில் வாழ்ந்த அண்ணா அங்கு ஒரு கூட்டத்தைக் கூட்டி, இலங்கை அரசுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்தார். அண்ணாவின் வழியில் வந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்., 1977ம் ஆண்டு தமிழ்மக்கள் சிங்களவரால் தாக்கப்பட்டபோது, சட்ட மன்றத்தில் கண்டனம் தெரிவித்ததோடு, இலங்கைத் தமிழர் படும் இன்னலை மத்திய அரசுக்கும் தெரியப்படுத்தி இலங்கைத் தமிழ்மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்க ஆவன செய்யும்படி வேண்டுகோள் விடுத்தார்" என்றார்.

திரு. எம். எஸ். பேரின்பநாயகம், யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். சௌந்தரநாயகம், திரு. எஸ். றெமியதாஸ் ஆகியோரும் உரையாற்றினர். (கொ-கு)

---

## 'அரச பாடசாலைகளே இருக்கும்'

(கண்டி)

"எதிர்காலத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தோட்டப் பாடசாலைகள் என்ற பெயரில் எந்தப் பாடசாலையும் இயங்காது. அனைத்துமே அரசாங்கப் பாடசாலைகளாக இருக்கும்."

இவ்வாறு கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா புனித திரித்துவக்கல்லூரியில் ஆய்வுகூடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"பல்கலைக்கழகங்களுக்கு அதிக மலையக மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக ஜனாதிபதி தலைமையிலான குழு ஆலோசித்துவருவதாகவும்" அமைச்சர் கூறினார். (இ)

---

# "இந்திராகாங்கிரஸ்-தி.மு.க. கூட்டு நிரந்தரமானதல்ல"

## யாழ். வந்த அ.தி.மு.க. பிரமுகர் கருத்து

(யாழ்ப்பாணம்)

"இந்திராகாங்கிரஸ்-தி. மு. க. கூட்டு ஒரு தேர்தல்கூட்டே அன்றி நிரந்தரமானதல்ல. தமிழ்நாட்டு அரசியலைக் கைப்பற்ற இந்திராவும் கருணாநிதியும் போட்டியிடுகின்றனர். தமிழக சட்டசபைத் தேர்தல் வரை இந்த இரு கட்சிகளும் நிலைத்துநிற்கமாட்டாது. அடுத்து நடைபெறவிருக்கும்தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலிலும் அனைத்துஇந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகமே மீண்டும் பலம்பொருந்திய ஆட்சியை அமைக்கும்."

சுயமரியாதை இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவுவிழாவில் அனைத்துஇந்தியஅண்ணா தி.மு.க. தலைமைக்கழகப்பேச்சாளரும், சுந்தரபாண்டியன் பட்டணக்கிளை அமைப்பாளருமான புரட்சித்தென்றல் எஸ். ஜே. சாதிக் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குருநகர் அண்ணாசிலை முன்றலில் யாழ்.மாவட்ட அண்ணா தி.மு.க, தலைவர் திரு. ஜே. டியூக் தலைமையில் கடந்த சனிக்கிழமை இவ்விழா நடைபெற்றது.

திரு. சாதிக் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எம். ஜி. ஆரின் ஆட்சிக்கு முன் தமிழ்நாட்டில் வறிய மக்களும் பாட்டாளி வர்க்கமும் இப்போதுபோல் வசதியாக வாழவில்லை.

"இந்திய துணைக்கண்டத்தில் நடைபெற்ற தேர்தல் இந்திராவுக்கும்-எம்.ஜி. ஆருக்கும் நடைபெற்ற போட்டியல்ல இந்திராவும்ஜனதாவுக்குமிடையில் நடைபெற்றபோட்டுயே. ஜனதா கட்சியின் ஆட்சியை வெறுத்த மக்கள் இந்திராவைத் தேர்ந்தெடுத்தனர்.

மத்தியில் எப்பொழுதும்நிலையான ஓர்ஆட்சி இருக்கவேண்டும் என விரும்புபவர் எம். ஜி. ஆர். ஐந்துஆண்டுகள் ஒருகட்சி நிலையான ஆட்சி நடத்த வேண்டும் என்று விரும்பியதால்தான் ஜனதாகட்சி அரசுக்கு ஈடாட்டம் கண்டநேரத்தில் சரண்சிங்குடன் கூட்டுச் சேர்ந்தார். அண்ணாவிரும்பிய கொள்கையும் அதுவேதான்.

### சந்தர்ப்பத்தை கலைஞர் பயன்படுத்தினார்

கலைஞர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார். நல்லெண்ணத்தோடு கலைஞர் இந்திராவுடன் கூட்டுச்சேரஇல்லை. 27 சதவீத வாக்குகளைப் பெற்ற அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழகம் லோகசபைத் தேர்தலில் 2 இடத்தையேபெற்றது. இந்திராவுடன் அனைத்து இந்திய அண்ணா தி.மு,க. கூட்டுச் சேர்ந்திருந்தால் நிலைமை வேறாக மாறியிருக்கும். இந்திராவுடன் கலைஞர்கூட்டுச்சேர்ந்ததால்தான் கலைஞர் 16 இடங்களைப்பெற்றார். அதைவைத்துக்கொண்டு தி.மு,க. வளர்ந்திருக்கிறது எனக் கூறமுடியாது. இந்தியத் துணைக்கண்டத்தில் இந்திராகாந்தி ஆட்சி அமைக்கவேண்டும் எனமக்கள் விரும்பியதால்தான் கலைஞர் 16 தொகுதிகளைப்பெற்றார்.

"லஞ்சம் வாங்கக்கூடாது என்ற தாரக மந்திரத்தைக் கொண்ட எம். ஜி. ஆர். மீது கப்பல்பேரஊழல் குற்றச்சாட்டைக்கொண்டுவந்து மக்கள் மத்தியிலிருந்து எம்.ஜி.ஆரின் மதிப்பைக் குறைக்கமுற்பட்டார் கலைஞர். அதுவும் மக்கள் முன் எடுபடவில்லை.

"இருளில்வாழ்ந்த குடிசை மக்களுக்கு மிகக்குறைந்த செலவில் மின்சாரமும் குழாய் நீர் வசதியும் ஏற்படுத்திக்கொடுத்தவர் எம். ஜி. ஆர்.

### நடிகர் விஜயகுமார்

சினிமாநடிகர் விஜயகுமார் அ.தி.மு.க.விலிருந்து விலகிவிட்டார். எங்கோ இருந்த விஜயகுமாரை புரட்சித்தலைவர் முன்னுக்குக் கொண்டுவந்தார். ஆனால்விஜகுமார் வெளியேறிவிட்டார். அதனால்அவர் தனக்கே அழிவைத்தேடிக் கொண்டார்.

"பஞ்சாயத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.கழகம் மாபெரும் வெற்றிஅடையும்

"பேரறிஞர் அண்ணாவின் பின்னால்தான் நாம் அரசியலில் புகுந்தோம். 1929-ம் ஆண்டு அண்ணா தனது 20வது வயதில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். அதன்பின்தான் சுயமரியாதை இயக்கம் வளர்ச்சி அடையத் தொடங்கியது. அண்ணா இக்கொள்கையிலிருந்துசிறிதளவும் பிசகாதுவாழ்ந்தார். அதனால் நாமும் அண்ணாவைப் பின்பற்றினோம். அறிஞர் அண்ணா காட்டிய பாதையில் நெறிதவறாது சென்றுகொண்டிருப்பதால்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை மக்கள் அண்ணாவின் வாரிசெனவும் அண்ணாவுக்கு அடுத்தபடியாகத் தமிழ்மக்களை வழிநடத்திச்செல்லத்தக்க ஒப்புயர்வற்ற தலைவனாகவும் மதிக்கிறார்கள்"

(கொ-அ)

......

## சுவடிகள் வார சொற்பொழிவு

(வவனியா)

சர்வதேச சுவடிகள் வாரத்தையொட்டி மாவட்ட அரசாங்க அதிபர்களின் உதவியோடு தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் நடாத்திவரும் சுவடிகள்பேணல் சொற்பொழிவும் சிலைடு படக்காட்சியும் இன்றும் நாளையும் வவனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

தேசிய சுவடிக்கூட தமிழ் நூல்களுக்கும் வெளியீடுகளுக்கும் பொறுப்பாகஉள்ள திரு. க. நவசோதி இன்று வவனியா கச்சேரியிலும், நாளை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சிங்காரவேலு தலைமையில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும்இச்சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். (கு)

......

## வீழ்ச்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் காலபோக அறுவடை மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. மன்னார் நெல்சந்தைப் படுத்தும் சபை நெல்லைகொள்முதல்செய்ய ஆரம்பித்துள்ளது. மன்னார் மாவட்டம் முழுவதிலும் இதற்கென 30க்கு மேற்பட்ட ஏஜண்டுகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனால் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நெல் சந்தைப்படுத்தும்சபை நெல்லை கொள்முதல் செய்வதற்குமுன் தனிப்பட்ட வியாபாரிகள் ஒரு மூடைநெல்லை 160 ரூபாவாக கொள்முகல் செய்தனர். நெல் சந்தைப்படுத்தும் சபைநெல்லை கொள்முதல் செய்ய ஆரம்பித்ததும் நெல்லின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. [க]

---

# 'புங்குடுதீவு மக்கள்வங்கி கிளை விரைவில் திறக்கப்படும்'

## வங்கித்தலைவர் உறுதியளித்ததாக பண்டிதர் தகவல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மூடப்பட்ட மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் விரைவில் திறக்க நடவடிக்கை எடுப்பதாக மக்கள் வங்கித்தலைவர் உறுதியளித்தார்.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

புங்குடுதீவில் அமைக்கப்பட்ட நிரந்தர மக்கள் கடையைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

விற்பனைத்திணைக்கள உதவி ஆணையாளர் திரு. என். எஸ். பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில்அவர் மேலும் கூறியதாவது:

'புங்குடுதீவில் மக்கள்வங்கிக் கிளையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வங்கித்தலைவரிடம் நேரில்கேட்டேன்.

'பாதுகாப்பு அமைச்சு போதிய பாதுகாப்பு உள்ளதென சிபார்சு செய்ததும் 2 வாரத்திற்குள் இக்கிளையைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

'பிரதிபாதுகாப்புஅமைச்சர் திரு. வெரப்பிட்டியாவுடனும் துணைச் செயலாளருடனும் தொடர்பு கொண்டுள்ளேன். பாதுகாப்பு அறிக்கை கிடைத்ததும் வங்கிக்கிளை திறக்கப்படும்.

சகலருக்கும் தேவையான அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் வாங்க இந்தக் கடைமூலம் வாய்ப்புக் கிட்டியுள்ளது.'

ஆசிரியர் திரு. வி. கே. ஏரம்புவும் உரை நிகழ்த்தினார். தீவுப்பகுதி அபிவிருத்திச்சபை இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பூநகரிபோன்ற இடங்களின் அபிவிருத்தியில் அரசு அக்கறை"

## -- யாழ். அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

"பூநகரி போன்ற கிராமங்களின் அபிவிருத்தி முயற்சியில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டிவருகிறது" என்று யாழ். மாவட்டஅமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறினார்.

பூநகரியில் புதிய அரிசி ஆலைத்திறப்புவிழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பூனகரிப் பகுதியில் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டு, மக்களை உற்சாகப்படுத்த மாவட்ட அமைச்சு முன்வந்துள்ளது. இன்று இங்கே திறந்து வைத்துள்ள அரிசி ஆலை, இப்பகுதிக்கு மிகவும் முக்கியமாக இருக்கும். அதுவும் பொருத்தமானநேரத்திலும், பொருத்தமான இடத்திலும் இது அமைகிறது பாராட்டுக்குரியவிஷயமாகும்.

"எரிபொருள் செலவு, போக்குவரவு செலவு ஆகியன தற்போது மிகவும் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாக பொருட்களின் செலவும் உயரக்கூடும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பலவித முயற்சிகளைஎடுத்து வருகின்றது. நெல் விளைகின்ற இப்பகுதிகளிலே நெல்லைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து அவற்றை தங்கள் ஆலைகளிலே அரிசியாக்கி, அந்த அரிசியை மீண்டும் விற்பனவு செய்யமுடியும். இதன் மூலம் மக்கள் நன்மை பெறுவார்கள். விலை உயர்வும் தடுக்கப்படுவதுடன் போக்குவரத்துச்செலவும் இல்லாது போய்விடும்.

"ஏறகனவே இங்கு நாம் வந்து நடமாடும் செயலகம் மூலம் உங்களில் பலரைசந்தித்திருக்கிறேன். இத்தகைய இடங்களுக்கு நேரில் வந்து, பிரச்னைகளை அறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதில் மாவட்ட அமைச்சு மிகவும்அக்கறை கொண்டுள்ளது:". (கொ-கு)

## நோயாளர் அச்சம் நீங்கியது

(சாவகச்சேரி)

கொடிகாமம் அரசினர்வைத்தியசாலை வளவினுள் இது வரை கட்டாக்காலியாகத் திரிந்த ஏராளமான நாய்களை நாய்பிடிப்போர் பிடித்துச் சென்றுள்ளனர். இதனால் நோயாளர்கள் அச்சமின்றி வைத்திய வசதியைப் பெற எந்நேரமும் வைத்தியசாலைக்குச்செல்லக் கூடியதாகவிருக்கின்றது. (அ)

## இ. போ. ச. பொறியியல் பிரிவு:

# தற்காலிக ஊழியரை நிரந்தரமாக்க கோரிக்கை

(நெல்லியடி)

வடபிராந்தியத்திலுள்ள இ. போ. ச. டிப்போக்களில் பணிபுரியும் தற்காலிக பொறியியல் பிரிவு ஊழியர்கள் நிரந்தரமாக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இ. போ. ச. டிப்போ ஊழியர் மன்றத் தலைவர்களுக்கும் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகராவிற்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இக்கோரிக்கைபற்றி தான் உரிய நடவடிக்கை எடுப்பதாக தலைவர் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது இ. போ. ச. டிப்போக்களில் ஏற்படும் வீண்விரயங்களையும் செலவுகளையும் கட்டுப்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது.

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போ ஊழியர் மன்றத் தலைவர் திரு. என். தியாகராசா உருத்திரபுரத்தில் இரவு தங்கும் பஸ்வண்டிச் சேவையை உருத்திரபுரம் சிவன் கோயில் வரை நீடிக்கவும் அங்கிருந்து கிளிநொச்சி வரைசேவை நடாத்தவும் கோரிக்கை விடுத்திருந்தார். (க)

## "சித்த ஆயுர்வேத வைத்தியர்கள்

# ஏடுகளையும் சுவடிகளையும் நூல் வடிவில் வெளியிட வேண்டும்"

## யோசவ் அடிகளார் உரை

(பண்டத்தரிப்பு)

"பிரசித்திபெற்ற தென்னிந்திய சித்த வைத்தியக்கலையைப் பின்பற்றி, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாகச் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் வைத்தியத்துறைக்குப் பெரும் சேவையாற்றிவருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். திபெத் நாட்டில் காணப்படும் பல அபூர்வ சக்தி படைத்த அரிய மூலிகைகள் இலங்கையில் காணப்படுகின்றன. இந்த மூலிகைகளின் மகத்துவத்தை உணர்ந்து, இவற்றைக் காலவெள்ளத்தில் அழிந்துபோகவிடாது பேணிப் பாதுகாத்துப்பயன்பெறவேண்டியது அவசியமானதாகும்."

பிரபல இந்திய சித்தவைத்திய நிபுணரும், இந்தோனேஷியா. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணஞ்செய்து, சித்த வைத்தியக் கலை பற்றிப் பிரசாரம் செய்து வருபவருமான வணபிற்றேர் யோசவ் அடிகளார் பண்டத்தரிப்பு வைத்திய கலாநிதி அல்போன்ஸ் அத்தனாசியார் இல்லத்தில் 'மூலிகை வைத்தியமும் அதன் மகத்துவமும்' என்னும் விடயம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இச்சொற்பொழிவின் போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்தெரிவித்ததாவது:

"சித்த வைத்தியம், மக்களின் உடல் நலத்திற்கும், நீடித்த ஆயுளுக்கும் பெருந்துணையாக இருக்கக்கூடிய சிறந்த ஒரு வைத்தியக் கலையாகும். சித்தர்களினாலும், முனிவர்களினாலும் கண்டறியப்பட்டு, பண்டைத்தமிழ்மன்னர்களால் கட்டிக்காத்துப் பேணிவரப்பட்ட இந்த வைத்தியக் கலையின் மகத்துவத்தை இன்றைய மக்கள் நன்கு அறிந்து உணரவேண்டியது அவசியமானதாகும். இன்று மக்களில் பெரும்பாலானோர் தமது நோய்கள் மிகவிரைவில் குணம் அடையவேண்டுமென்ற நோக்கில் மேலைத்தேச அரங்கில் வைத்தியத்துறையை நாடிச் செல்கின்றனர். இதற்காக அதிக பணத்தையும் செலவிடுகின்றனர். சித்த வைத்தியத்துறையில் நம்பிக்கை வைத்து அதன் அபூர்வ சக்தியையும் மகத்துவத்தையும் உணர்ந்து கொண்டால் நமது சுதேச வைத்தியத்தில் குறைந்த செலவில் நோய்களைப் பூரணமாக்கிக் கொள்ளமுடியும்.

தொய்வு, நீரழிவு, எலும்புகள் முறிவு போன்ற பல நோய்களை இலகுவில் குணமாக்கக்கூடிய வைத்தியமுறைகள் இந்த வைத்தியத்தில் இருக்கின்றன. இவ்வைத்தியத்திற்குப் பயன்படும் மூலிகைகளில் காணப்படும் அபூர்வ சக்திகளைப் பற்றி ஆராய்ந்த மேலைநாட்டு விஞ்ஞானிகள் நமது மருத்துவ மூலிகைகளை அங்கு தருவித்து மருந்துவகைகளைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளனர். இங்குள்ள சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் தம் வசமுள்ள ஏடுகளையும், சுவடிகளையும் நூல்வடிவில் வெளியிடவும், அவற்றை மக்கள் மத்தியில் பரப்பவும் முன்வரவேண்டும். இவ்வருங்கலையை எமது எதிர்காலச் சந்ததி அறிந்து பயன்படுத்தக்கூடிய [illegible] நாம் நடவடிக்கை [illegible]. கூட்டத்திற்குத் தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் திரு. சு. வித்தியானந்தன் உரையாற்றுகையில், "எமது பகுதியில் காணப்படும் சாதாரண செடிகள், பூண்டுகள்கூடச் சிறந்த நோய் நிவாரணிகளாக, அபூர்வசக்தி படைத்த மூலிகைகளாக இருக்கின்றன என்றும் இதுபற்றித் தகுந்த முறையில் ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டுமென்றும் பொது மக்களினால் கேட்கப்பட்ட மூலிகைகளின் பயன்கள், வீட்டு வைத்திய முறைகள் பற்றிய கேள்விகளுக்கு வண. பிறிற்றோ யோசவ் அடிகளார் விளக்கம் கூறிப் பதிலளித்தார்.

டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் நன்றி கூறினார். (க)

## வடக்கில் சு.க.கிளைகள்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் ஆவரங்கால் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் மாதகல் வ.கந்தசாமி தலைமையில்நடைபெற்ற போது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்— தலைவர்-பி.நாகமுத்து.செயலாளர்-க.பொன்னையாபொருளாளர்-வ.இரத்தினசிங்கம் 8பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## ஓய்வுபெறுகிறார்

(பண்டத்தரிப்பு)

சித்தங்கேணி உபதபால் நிலைய அதிபர் திரு. கந்தையா இராசரத்தினம் தமது 33 வருட சேவையின் பின்னர் மார்ச் மாதம் 5ம் திகதி பதவியிலிருந்து இளைப்பாறுகின்றார்.

# "கொக்குவில் - யாழ்.நகர் பஸ்சேவை வேண்டும்"

## கொக்குவில் முன்னேற்றச் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் குறுகிய தூர பஸ் சேவையொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திராவிடம் கோருவதென கொக்குவில் முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் திரு. மகாதேவா தலைமையில் கொக்குவில் முன்னேற்றச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியை கீரிக்காணும் விடயங்கள் பற்றி சந்திப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

விற்பனைத் திணைக்களத்தின் விற்பனை நிலைய மொன்றை கொக்குவிலில் ஆரம்பிக்க வேண்டும்.

கொழகுவில் தபால் நிலையத்தில் மேலதிக ஊழியரை நியமிக்க வேண்டும்.

கொழகுவிலில் கோழிப் பண்ணையொன்றை அமைக்க வேண்டும். நிரந்தர மீன் சந்தை ஒன்றையும் அமைக்க வேண்டும்.

சங்க உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: நீதிபதி கே. பாலகிட்ணர், தலைவர் திரு. ம. மகாதேவா. உபதலைவர்: திரு. க. சோமசுந்தரம், செயலாளர் திரு. சி. வி. இராஜேந்திரம் (யாழ் மாவட்ட அமைச்சு பத்திரிகை தகவல் அதிகாரி) உபசெயலாளர் திரு. தேவராசா, பொருளாளர் திரு. பா. சடாட்சரம், உப-பொருளாளர் திரு. கே. செந்தில்தாசன் கணக்குப் பரிசோதகர் திரு. க. தளையசிங்கம். கமிட்டி உறுப்பினராக திருமதி ராசலட்சுமி இராசேந்திரா, திருவாளர்கள் த. சகாதேவன், வே. தம்பி, ஆ. சொர்ணலிங்கம், த. மதியாபரணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# மந்திகை ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படுகிறது

(புலோலி)

மந்திகை அரசினர் வைத்திய சாலை மன நோயாளர் சிகிச்சைப்பிரிவு விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஒரு லட்சம் ரூபா செலவில் விஸ்தரிக்கப்படவுள்ள இம் மனநோயாளர் சிகிச்சை நிலையத்தை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளை மனநோய் வைத்திய நிபுணர்களான டாக்டர் ஞானலிங்கம், டாக்டர் யோகநாதன் ஆகியோர்மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சிகிச்சை நிலையத்தை விஸ்தரிப்பதற்கான நிதியைப் பொது மக்களிடமிருந்தும், கலாச்சார நிகழ்ச்சிகள் நடாத்துவதன் மூலமும் பெற்றுக் கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நல்லையில்

# இன்றும் நாளையும் யோகாசன வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் யோகாசன ஆசான் திரு. ஆண்டியப்பன் இன்று செவ்வாய் மாலை 6-30 மணிக்கும் நாளைபுதன் மாலை 4 மணிக்கும் நல்லை ஆதீனத்தில் யோகாசனம் செய்து விளக்கம் கூறுவார்.

மேற்படி இருதினங்களிலும் காலை 5 மணியளவில் பயிற்சி வகுப்புகளும் திரு. ஆண்டியப்பன் நடாத்துவார். (ஈ)

## யாழ் நகரில் லக்சல மீண்டும் திறக்கப்படும்

(பண்டத்தரிப்பு)

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தை அடுத்து மூடப்பட்ட யாழ்ப்பாணம் லக்சல விற்பனை நிலையம் மீண்டும் விரைவில்திறக்கப்படவுள்ளது, இத் தகவலை யாழ்,சிறுகைத் தொழில் திணைக்களத்தின் உதவி அதிபர் திரு,எஸ்,வில்வலிங்கம் தெரிவித்தார்.(அ)

......

## ஆளுக்கு அரை இருத்தல் மா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனதுகிளைச் சங்கங்களுக்கு ஊடாகப் பங்கீட்டு அட்டையின் பிரகாரம் [illegible] ஒருவருக்கு அரை இருத்தல் மா என்ற அடிப்படையில் மா விநியோகம் செய்து வருகிறது. (அ)

......

## நடன வகுப்பு

(சரவணை)

புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் சனி ஞாயிறு நாட்களில் நடன வகுப்பு நடாத்த ஏற்பாடாகியுள்ளதுஇதற்கான முயற்சியில் மன்ற நிர்வாகிகள் ஈடுபட்டுள்ளனர். தினமும் பாலர் கல்விப் படிப்பும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (அ)

......

## ஈவினையில்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்த்தொகுதியிலுள்ள ஈவினைகிராமத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

தலைவராக திரு,சி,ஞானசூரியரும்,செயலாளராக திரு'செ சிவநேசனும், பொருளாளராக திரு, அருளானந்தமும், கிளை நிர்வாகிகளாகதெரிவு செய்யப் பட்டனர். (க)

......

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் நிர்வாகப் பொறியியலாளர் திரு. வீ. பத்மநாதன் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றசெய்யப்பட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் சார்பாகவும் பாலா குரல் எழுப்புவார்

## அவரது கருத்துக்களை நாம் மதித்தோம்' என்கிறார் பிரதி கல்விமாஅதிபர் ஜோர்ஜ் மெண்டிஸ்

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாக நாம் நடத்திய கலந்துரையாடலில் அமரர் பாலசுப்பிரமணியம் திறமையாக வாதாடிவந்தார். சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் சார்பாகவும் குரல் எழுப்பும் அவரது கருத்துக்களுக்கு நாம் மதிப்பளித்து ஏற்று வந்திருக்கிறோம்."

இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச்செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் நினைவுவிழாவில் பிரதி கல்விமா அதிபர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் பேசுகையில் கூறினார்.

சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் திரு. மெண்டிஸ் தொடர்ந்து பேசுகையில், "அமரர் பாலா தெரிவிக்கும் கருத்துக்கள் நியாயபூர்வமானவையாக இருப்பதுடன் அவற்றை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் சக்தியும் அவரிடம் இருந்தது. அவர் ஒரு சக்திமிக்க ஒரு பெரிய மனிதராக மதிக்கப்பட்டார் என்றார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'தமிழ்மக்கள் மத்தியிலுள்ள கட்சிகள்கூட்டணியாகஇணைய வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டதோ அதேபோல ஆசிரியர்களின் நலனைக் கவனிப்பதற்கு இரு பெரிய தமிழ் ஆசிரியர் சங்கங்களை இணைப்பதில் அமரர் பாலா வெற்றி கண்டார். தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வளர்ந்து ஆசிரிய சமுதாயத்துக்கு செயல்திறனைப் பயன்படுத்தினார்.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச் என் பெர்னாண்டோ பேசுகையில், "1975ம் ஆண்டு சகல ஆசிரியர் சங்கங்களும் ஒன்றிணைந்து நடத்தவிருந்த போராட்டத்தை அப்போதைய அரசு தடைசெய்தபோது நண்பர் பாலா நம்முடன் சேர்ந்து தீவிரமாகப் பாடுபட்டார். அடிமைநிலையில் இருந்துவரும் ஆசிரியர்களின் அடிமைவிலங்கை ஒடிக்கப்போராடுவதே நாம் அவருக்குச்செய்யும் அஞ்சலியாகும்" என்றார்.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜனாப் எஸ். எச். எம். ஜமீல் பேசுகையில், 'பாலா மறைந்தாலும் அவர் பத்து வருடங்களாக ஆசிரிய சமுதாயத்துக்குச் செய்த சேவை மறையாது என்றார்.

### 'அமிர்' உரை

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இரங்கலுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

"பிறப்பவர்கள் இறப்பது உறுதிதான் ஆனால் அவர்கள் வாழ்நாளில் எதனைச் செய்கின்றார்கள் என்பதுதான் முக்கியம் எவரும் நிரந்தரமாக எவருக்கும் சொந்தமானவர்கள் அல்ல பாலாவின் இழப்பால் நாம் கவலையுறுவதைவிடுத்து நாம் பாலாகாட்டியவழியில் செல்வதுதான் எமது கடமையாகும்.

"ஏனைய தொழிற்சங்கங்களிலும் பார்க்க ஆசிரிய தொழிற்சங்கம் பல வழிகளிலும் சிறப்புப்பெறுகிறது. இந்தவகையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு கட்டுப்பாட்டுடன் வளர்ந்த சங்கமாகும். இதற்கு பாலா ஒரு முக்கிய காரணகர்த்தா. பாலாவுக்கு நாம் செய்யும் கைமாறு அவரது குடும்பத்துக்கு நாம் உதவுவதோடு அவரது இலட்சியத்தின்படி நடத்தல்வேண்டும்."

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினர். பாலாவின் குடும்பத்தினரும் உறவினர்களும் கலந்துகொண்டனர். (கு)

## தலைமன்னார் துறைமுகத்தில்

# வைத்தியர் இல்லாததினால் கப்பலில்வந்தவர்கள்கஷ்டம்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தில் கப்பலில் வந்திறங்கும் பிரயாணிகளை வைத்திய பரிசோதனை நடத்தி வைத்திய அத்தாட்சி வழங்க வைத்திய அதிகாரி இல்லாததால் கடந்த திங்கட்கிழமை கப்பலில் வந்த பிரயாணிகள் மூன்றரைமணி நேரம் கப்பலில் அடைபட்டுக்கிடந்தனர்.

தலைமன்னார் துறைமுகத்தில் வைத்திய பரிசோதனை நடத்தி வைத்திய அத்தாட்சி வழங்கும் வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றிருந்தார். இவருக்குப்பதிலாக ஒருவரும் நியமிக்கப்படாததால் பிரயாணிகள் மூன்றரை மணிநேரம் கப்பலில் அடைபட்டுக் கிடந்தனர்.

தமது குடும்பத்தோடு இந்தியாவுக்குச் சென்று திரும்பிய பதுளை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திரு. வேலும்மயிலும் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோவின் உத்தரவை யடுத்து கப்பலில் வந்திருந்த பிரயாணிகளை வைத்திய பரிசோதனை நடத்தி வைத்திய அத்தாட்சி வழங்கிய பின்னரே பிரயாணிகள் துறைமுகத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் கப்பலில் வந்த பிரயாணிகள் மூன்றரைமணி நேரம் தாமதித்து இரவு 8-30 மணிக்கு துறைமுகத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டனர். (க)

## வீடுதேடி சிமெந்து வருகிறது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வீடுகட்டும் இடங்களிலேயே பாவனையாளர்களுக்கு சிமெந்து விநியோகிக்கும் திட்டம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்குடா நாட்டிற்குள் சிமெந்துபெறவிரும்பும்பாவனையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், உதவி அரசாங்க அதிபரின் அனுமதி என்பவற்றைச் சமர்ப்பித்தால் அவர்களது வீடுகளிலேயே கொண்டு சென்று சிமெந்தை விநியோகிக்கும் இத்திட்டத்தினை காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அமுல்நடத்தியுள்ளது.

இதன்படி முதலாவது விநியோகம்வியாழனன்றுதொழில் முகாமையாளர் திரு. சூரிய தேவா, ஆளணி முகாமையாளர் திரு. குணரத்தினம் உட்பட தொழிற்சாலைப் பிரமுகர்களால் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதிர்ஷ்டலாபச்சீட்டு மூலம் முதலில் மூவர் தெரிவுசெய்யப்பட்டு சிமெந்து விநியோகிக்கப்பட்டது.

இச்சிமெந்து பைக்கற் ஒன்றுக்குப் போக்குவரத்து செலவு 5 ரூபா அறவிடப்பட்டது (அ)

## தமிழிலும் செய்திகள்

(மன்னார்)

இதுவரை காலமும் கடற்றொழில் இலாகாவால் வெளியிட்டுவந்த 'தீவர' என்ற சஞ்சிகையில் இம்முறை தமிழில் கடற்றொழில்பற்றி செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் மன்னார் கடற்றொழிலாளர்கள் அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (க)

# "கல்வியும் பண்பாடும் அற்றவர்களே உண்மையான அநாதைகள்!"

(யாழ்ப்பாணம்)

"பெற்றோரை இழந்தவர்களை அநாதைகள்என்று கூற வேண்டாம். உண்மையான அநாதைகள், கல்வியும் பண்பாடும் இல்லாதவர்களே என இமாம் கஸ்ஸாலி கூறியுள்ளார். இஸ்லாத்தின் மூலாதாரங்களான திருக்குர்ஆனும், பெருமானார் முஹம்மது [ஸல்] அவர்களின் பொன்மொழிகளான ஹதீஸும் கல்வியின் மகத்துவத்தை தெளிவாக எடுத்துவிளக்குகின்றன. இறைவா எனது கல்வியை வளர்ச்சிபெறச்செய் என திருமறை பிரார்த்திக்குமாறு மக்களைக் கேட்கின்றது. கற்றவர்களும், கல்லாதவர்களும் சமமாக மாட்டார்கள் என்றும் திருமறை கூறுகின்றது. ஆண்களும் பெண்களும் கல்விகற்பது அவசியமென பெருமானார் [ஸல்] அவர்கள் கூறியுள்ளார்கள். மனிதனுக்கு கொடுக்கப்பட்ட செல்வங்களில் மிக உயர்வானது கல்வியே. கல்வியின் மூலமே மனிதசமுதாயம் உயர் அந்தஸ்தைப் பெறமுடியும். முஸ்லிம் . சமூகத்தின் நிலை இதற்கு மாற்றமாக இயங்குவதால் நாம் பின்தங்கிய சமூகமாக வாழ்கின்றோம்"

இவ்வாறுயாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் முஸ்லிம் மஜ்லிஸால் ஒழுங்குசெய்யப்பட்ட மீலாத் விழாவில் பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அகிலஇலங்கை சதிப்மார் மத்தியசம்மேளனத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் டெகலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் விரிவுரையாளருமானமௌலவி கே.எம்.எச். காலித்தீன் குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு ஆசிரியர் ஜனாப். எம். பஸீர் தலைமை தாங்கினார். தொடர்ந்து இவ்விழாவில் உரையாற்றிய மௌலவி காலித்தீன், பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் போதனைகளை தற்கால உலகம் கௌரவப்படுத்துகின்றது. அகிலத்துக்கு அருட்கொடையாக வந்த அவர்கள் மனிதகுலத்தில் இன, மத, நிற பேதங்களை அகற்றி மனிதகுலத்தை ஒன்றுபடுத்துவதில் முன்னின்று அரும்பணி புரிந்தார்கள்".

இவ்விழாவில் ஜனாப் எம். எம் யூசுப், ஜனாப். எம். எஸ். அப்துல்காதர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு மௌலவி காலித்தீன் பரிசில்களை வழங்கினார். (கொ)

# "இளைஞர்கள் இயக்கத்தின் தலைமையையேற்கவேண்டும்

## இளைஞர் பேரவைக் கூட்டத்தில் காசிஆனந்தன்

(மட்டக்களப்பு)

"இளைஞர்கள் மத்தியில் தீவிரம் மட்டும் இருந்தால் போதாது. ஒற்றுமையுடன் இயக்கத்தின் தலைமையையும் உத்தரவையும் ஏற்று கட்டுப்பாட்டுடன் இயங்கினால் எமது இலட்சியத்தை நாம் நிச்சய மடைவோம்."

இவ்வாறு கவிஞர் காசிஆனந்தன், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை கலந்துரையாடலில் பேசுகையில் கூறினார்.

பேரவையின் அமைப்பாளர் திரு இரா. வாசுதேவா தலைமையில் மட்டக்களப்பு சிவானந்த ஆச்சிரமத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. காசிஆனந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தந்தை செல்வாவின் [illegible] உருவாக்கப்பட்ட இவ் இயக்கம் இன்று தந்தை செல்வா உயிருடன் இல்லாவிடினும் வேகமாய் வளர்ந்து செயல்படுகின்றது. இன்று நம் நாட்டில் தமிழ்இளைஞர்கள் தந்தை செல்வாவின் காலத்தில் அடைந்த தாக்குதல்களைவிட பெரும் தாக்குதல்களை அடைகின்றார்கள். இத்தாக்குதலினால்தான் அவர்கள் மத்தியில் போராட்டத்தில் தீவிரம் ஏற்பட்டுள்ளது.

நமது இலட்சியம் நிறைவு பெறவேண்டுமானால் இளைஞர்கள் மத்தியில் தீவிரம்மட்டும் இருந்தால் போதாது. ஒற்றுமை வேண்டும்.

பேரவையின் பிரதம அமைப்பாளர் திரு.இரா, வாசுதேவா உரையாற்றுகையில் கூறியதாவது:-

"இன்றைய கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான யாழ்ப்பாண பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், திருமலை பா. உ. திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டு எமது பகுதி தமிழ் இளைஞர்கள் மத்தியில் எழுந்துள்ள மனக்குமுறல்களை அறிந்து தீர்த்துவைப்பார்கள் என எதிர்பார்த்தோம். அவர்கள் வரவில்லை. [illegible] மன்றி எமது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் ஒரேஒரு தமிழர்விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரான திரு. பூ. கணேசலிங்கம் இன்று மட்டக்களப்பில் இருந்தும் இவ் வைபவத்தில் கலந்துகொள்ளாமை குறித்து மிகவும் வேதனைப்படுகின்றோம்."

பட்டிருப்பு தொகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. பூ. நடேசானந்தம் உரையாற்றுகையில் "மட்டக்களப்பு மாவட்டத்தில் கற்குடா, பட்டிருப்பு தொகுதிகளிலுள்ள ப. நோ. கூ. சங்கதேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது. மட்டக்களப்பு தொகுதியில் மட்டும் போட்டியிடாமை மிகவும் வேதனைக்குரியது" என்றார்.

மற்றும் இவ்வைபவத்தில் திரு. அல்போன்ஸ்மேரி, வணபிதா யோசப்மேரி, கல்முனைத் தொகுதி [illegible] இரா. பன்னீர்செல்வம் [illegible] பலர் உரையாற்றினர். [க]

## கடற்றொழில் பாதிப்பு

(மன்னார்)

எரிபொருள் விலையேற்றத்தாலும், மீன்பாடு குறைவாக இருப்பதாலும் பேசாலையில் உள்ள றோலர் சொந்தக்காரர் தமது றோலர்களை விற்பனை செய்துவருகின்றனர். இதனால் வெளியிடங்களிலிருந்து பேசாலையில் கடற்றொழில் செய்துவந்த தொழிலாளர்களும் வெளியேறிக்கொண்டிருக்கின்றார்கள்.

முன்பு அதிகளவு இறால் பிடிக்கப்பட்டு வந்தது. இப்போது இறாலும் குறைவாகவே பிடிபடுகிறது. இதனால் கடற்றொழில் மிகவும் பாதிப்படைந்துவருகிறது. இப்போது இங்குள்ள மீனவர்கள் றோலருக்குப் பதிலாகப் பாய்த் தோணிகளிலேயே மீன்பிடித்து வருகிறார்கள். இன்னும் சிறிது காலத்தில் றோலர்கள் மிகவும் குறைந்து, பாய்த் தோணிகளே அதிகமாகிவிடுமெனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு உட்பட ஒன்பது சட்டசபைகள் கலைப்பு

## எதிர்க்கட்சிகள் வசமிருந்தவை ராஷ்டிரபதி ஆட்சியில்!

புதுடில்லி, பெப். 18

**இந்தியாவில் இந்திரா காங்கிரஸ்கட்சியின் கீழில்லாத ஒன்பது மாநிலங்களையும் மத்திய அரசாங்கம் கலைத்து விட்டது!**

**தமிழ்நாடு உட்பட கலைக்கப்பட்ட இந்த ஒன்பது மாநிலங்களிலும் ராஷ்டிரபதியின் நேரடி ஆட்சி அமுல் செய்யப்பட்டுள்ளது.**

நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நீண்ட நேரமாக நன்கு ஆராய்ந்து, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ம் ஷரத்தின் கீழ் எடுக்கப்பட்ட இம்முடிவில் நேற்று மாலையே ராஷ்டிரபதி திரு. நீலம்சஞ்சீவரெட்டி கையெழுத்திட்டார்.

உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா, பஞ்சாப் ஆகிய ஒன்பது மாநிலங்களின் ஆட்சியும் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பனவாக இல்லையென்று காரணங்காட்டியே இவைகலைக்கப்பட்டன.

77ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தபோதும் அப்போது இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலிருந்த ஒன்பது மாநிலங்களைக்கலைத்திருந்த போதும் இக்காரணமே கூறப்பட்டது.

கடந்த மாதம் நடைபெற்ற லோகசபை இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ்கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றபோதிலும் மேல் சபையில் அதன் வலு குறைவாகவே உள்ளது. இதனுல்கீழ் சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மேல் சபையில் நிறைவேற்றுவது சிரமமாகவே இருந்துவருகிறது. கலைக்கப்பட்ட இந்த ஒன்பது மாலங்களுக்கான சட்டசபைத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ்வெற்றி பெற்றுல் மேல் சபையிலும் அதன்வலு உயர்ந்துவிடும். (கு)

### கருணாநிதி- இந்திரா மீண்டும் சந்திப்பு

புதுடில்லி, பெப். 18

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று பிரதமர் திருமதி இந்திராகாந்தியை மீண்டும் சந்தித்து 30நிமிடநேரம்பேச்சுவார்த்தை நடாத்திஞர்.

இப்பேச்சுவார்த்தையின் போது திரு. சஞ்சய்காந்தியும் உடனிருந்தார்.

திரு.கருணாநிதி நேற்று ராஷ்டிரபதி, அமைச்சர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திஞர். (கு)

### 1995ல் அடுத்த சூரியகிரகணம்

புதுடில்லி, பெப். 18

அடுத்த சூரிய கிரகணம் 1995ம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதி இடம்பெறுமென்று இந்திய வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சூரிய கிரகணத்தின்போது இந்தியாவில் சூரியனின் 89 வீதம் மறைக்கப்பட்டதாகவும் நிபுணர்கள் தெரிவித்தனர். (இ)

## "மக்களின் தீர்ப்பை அரசு மதித்துநடக்கிறது" -- கருணாநிதி

புதுடில்லி, பெப், 18

கடந்தமாதம் நடைபெற்ற லோகசபை இடைத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை அரசு மதித்து நடப்பதாகவே இம்முடிவு எமக்கு எடுத்துக்காட்டுகிறது'' என்று தி. மு. க. தலைவர் திரு. மு.கருணாநிதி 9மாநிலங்களை அரசாங்கம் கலைத்தமை குறித்து கருத்துதெத்ரிவிக்கையில் கூறிஞர்.

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் திரு. கருணாநிதியிடம் நிருபர் ஒருவர் கருத்துக் கேட்டபோது அரசின் இம்முடிவு தமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லையென்று கூறிய அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் ''முன்னர் உதாரணமாகநடந்து மாநிலங்களைக் கலைத்ததன்மூலம் பலன் அடைந்தவர்கள் இதனை 'எதிர்பார்த்தேயாகவேண்டும்'' என்ருர்.

### மூப்பஞரின் கருத்து

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்உறுப்பினர் திரு. கருப்பையா மூப்பஞர் கருத்துத் தெரிவிக்கையில் ''அரசின் இம்முடிவு எதிர்பார்க்கப்படாததல்ல. இம்முடிவுக்கான மக்களின் அங்கீகாரம் எமக்கு எப்போதோ கிடைத்துவிட்டது'' என்ருர். (கு)

## "சட்டசபையைக் கலைத்தமை மகிழ்ச்சிக்குரியது" --எம்.ஜி.ஆர். கருத்து

சென்னை, பெப். 18

''லோகசபை இடைத்தேர்தல் முடிவுகளை வைத்துக் கொண்டு மக்கள் மத்தியில் நாம் செல்வாக்கை இழந்துவிட்டோமென்று கூறுபவர்களுக்கு தக்க பதில் ஒன்றைமக்கள் விரைவில் வழங்குவார்கள். தமிழ்நாடு சட்டசபையைக் கலைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்''.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சட்ட சபையைக் கலைத்தமை பற்றி நிருபர் ஒருவர் கேட்டபோது கூறிஞர்.

இது பற்றி கருத்துத் தெரிவிக்க திரு. எம். ஜி. ஆர். முதலில் மறுத்துவிட்டபோதும் மீண்டும்வற்புறுத்திக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறிஞர்.

தமிழ்நாடு சட்டசபை நிதி அமைச்சர் திரு. நாஞ்சில்மனேகரன் கருத்துத் தெரிவிக்கையில் சட்டசபையைகலைத்தமை ஜனநாயக விரோத செயல். தாம் இதனை எதிர்பார்க்கவில்லை'' என்ருர்.

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஆர்.நெடுஞ்செழியன் கருத்துத்தெரிவிக்கையில், ''மத்தியில் நிலையான ஆட்சி அமைப்போமென்று கூறியே ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழ்நாட்டில் நிலையான அரசைக் கலைத்துவிட்டார்கள்'' என்ருர். (கு)

### வருடாந்த உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று அருள்மிகு சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 21-ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதிஞெரு தினங்கள் நடைபெறவுள்ளது.

29-ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (கு)

அரபு நாட்டில் அமையும் முதலாவது

## இஸ்ரேலியதூதரகம் இன்று கெய்ரோவில் திறக்கப்படும்

கெய்ரோ. பெப். 18

கெய்ரோவில் இஸ்ரேலியத் தூதரகத்தை திறந்து வைப்பதற்கான விசேட குழு ஒன்று இன்று கைரோ.பயணமானது.

அரபு நாடொன்றில் முதலாவதாக அமைக்கப்படவுள்ள இஸ்ரேலிய தூதரகம் நாளை திறந்துவைக்கப் படவுள்ளது. சம்பிரதாயபூர்வமாக நாளை திறந்துவைக்கப்படவுள்ள இந்த தூதரகத்தின் வாசலில் புதிய தூதுவர் [illegible]யாஸ், இஸ்ரேலிய தேசியக் கொடியை ஏற்றி அதனைத் திறந்துவைப்பார். (கு)


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பிஞல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் [illegible]ரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - ஜெயலலிதா
நடித்த
சூரியகாந்தி
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

REGAL (Ja‍‍ na) Phone: 3
Daily at -00, -30 7-00 9-30 P m
For the first time in 42 years. One film Sweeps, all the Major Academy Awards.
WINNER OF 5 ACADEMY AWARDS
Best Picture
JACK NICHOLSON
ONE FLEW OVER THE CUCKOO'S NEST
Adults only Color

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
2-nd Crowded Grizzly Week
"GRIZZLY"
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 10-30, 4-45, 7-00 &9-45
JIM BROWN
in
Slaughters Bigripoff

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
சிவாஜி-தேவிகா-விஜயகுமாரி
சா ந் தி

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
தேன் சிந்துதே வானம்
(புத்தம் புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
தெ ய் வ ம க ன்

SRIDHAR JAFFNA Today only
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
FRAMED
(Adults only)
From 20-2-80 BADGE 373
Coming Soon: THAT MAN BOLT

கடைசி மூன்று தினங்கள் மட்டும
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தே வ தா ஸ்
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. தவறவிட்டோம் என்ற ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே முந்திக்கொள்ளுங்கள்!

அராலியில் நடைபெற்ற

# தாலிக்கொடி கொள்ளை; 2 எதிரிகளுக்கும் சிறை

## உருக்கிய நிலையில் கொடி மீட்பு

(பண்டத்தரிப்பு)

வீட்டில் தனியாக இருந்த பெண் ஒருவரை கத்தியைக் காட்டி பயமுறுத்தி அவரின் தாலிக்கொடியை கொள்ளையடித்துச் சென்றதாக குற்றம் காட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரியான துரைசிங்கம் குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி அவருக்கு 4 வருடம் 8 மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இக்கொள்ளைக்கு உடந்தையாக இருந்த சிவம் என்பவருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அராலியிலுள்ள வீடொன்றில் தனியாகவிருந்த சிவபாக்கியம் என்னும் பெண்ணைக் கத்தியைக்காட்டிப்பயமுறுத்தி அவரிடமிருந்த தாலிக்கொடியை கொள்ளையடித்துச் சென்றதாக துரைசிங்கம் என்பவர்மீதும் இதற்கு உடந்தையாக இருந்ததாக சிவம் என்பவர் மீதும் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

கொள்ளையடிக்கப்பட்ட தாலிக்கொடி உருக்கப்பட்ட நிலையில் யாழ். நகரிலுள்ள நகைக்கடையொன்றிலிருந்து சங்கானைப் பொலிசாரினல் மீட்கப்பட்டது. (க)

## இன்றைய பலன்

மாசிமாதம் 7-ம் திகதி
(19-2-80)
செவ்வாய்க்கிழமை

மேடம்: வசதிகள் பெருகும் கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

இடபம்: உறவு முறைகளில் வெடிப்புகள் தென்படும். வேண்டிய ஒருவரின் விரோதத்தைச் சம்பாதிப்பீர்கள். கவனம் நன்று.

மிதுனம்: மேலிடத்து ஆதரவு கிடைக்கும். விடயங்கள் அனைத்தும். கண்ணியமாகத் தீரும். மாதுரு சுகத்திற்குமிடமுண்டு.

கடகம்: விவசாய விருத்தியுண்டு. புத்திரமகிழ்ச்சியுண்டு. இயந்திர வளர்ச்சியுமுண்டு. பொன்னன தினம்.

சிங்கம்: சத்துருவாற் கெடுதி பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். குடும்பத்திலும் சஞ்சலத்திற் கிடமுண்டு.

கன்னி: காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். வியாபார விருத்தியுண்டு.

துலாம்: பணம் பறிபோவதற்கு இடமுண்டு. எந்த விடயத்திலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். செய்தொழில் தளர்ச்சியுண்டு.

விருச்சிகம்: அறிஞர் சந்திப்பு இன்றுநிகழும். ஆக்கப் பணியிலும் ஈடுபடுவீர்கள். தந்தை வழி ஆதரவு தப்பாமல் கிட்டும்.

தனுசு: பேட்டிகாண்பதற்கு ஏற்றதினம். டாக்டர்களாயின் போற்றப்படுவார்கள். இல்லச் சிறப்புமுண்டு.

மகரம்: வணிகத்துறையில் முன்னேற்றமுண்டு. குடும்பத்திலும் அமைதி நிலவும். வரவிலும் திருப்திகாணப்படும்.

கும்பம்: பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில்துறையில் தொல்லைகளை உருவாகலாம். திருப்தியற்றதினம்.

மீனம்: வாழ்க்கையில் புதிர் தோன்றும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். ஆணவத்தை அடக்கி நடக்கவும்.

திருமலை
க.வேலுப்பிள்ளை
56/14. ஆத்திகுடி வீதி,
யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஆசை 60 நாள்

தமிழ்க்காங்கிரஸ் குழு

## தேர்தல் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் சார்பில் 10 பேர் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் 4-ந் திகதி தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் அழைப்பை ஏற்பதென்றும் சாட்சியமளிப்பதற்காக 10 பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவாகியது. கூட்டத்திற்கு, உபதலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமை வகித்தார்.

செயற்குழு உறுப்பினராக நீண்டகாலமாகச் செயலாற்றிய முன்னைநாள் மண்டதீவு கிராம சபைத் தலைவர் அமரர் எஸ். கைலாசபிள்ளையின் மறைவு குறித்து, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, அன்னாரின் குடும்பத்துக்கு அனுப்பி வைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் நகல்யாப்பு இறுதிப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு அடுத்த செயல் கூட்டத்தில் பூரணப்படுத்துவதற்காக ஒத்திவைக்கப்பட்டது. (கெ-கு)

## பஸ் ஊழியரின் முன்மாதிரி

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து மன்னாரை நோக்கி வந்த பஸ்ஸில் பிரயாணி ஒருவர் 900 ரூபாவைத் தவறவிட்டு விட்டார். இதனைக் கண்டெடுத்த சாரதி திரு செபஸ்தியாம்பிள்ளையும் நடத்துநர் திரு. பாலசிங்கமும் அப்பணத்தை உரியவரிடம் ஒப்படைத்தனர்.

மன்னார் இ. போ. ச. சாலையைச் சேர்ந்த சாரதி திரு. செபஸ்தியாம்பிள்ளையையும், நடத்துநர் திரு. பாலசிங்கத்தையும் மன்னார் இ. போ. ச டிப்போ அத்தியட்சகரும், பஸ் பிரயாணிகளும் பாராட்டினர். (க)

## அரசாங்க அதிபர்க்கு வரவேற்பு

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னண்டோ இன்று பெரியமடு குடியேற்றத் திட்டத்திற்கு விஜயம் செய்வார்.

பெரியமடு அறபாத் சனசமூக நிலையமும், வளர்மதி கிராம முன்னேற்றச் சங்கமும் அல்ஜாமியுல் அஸ்கர் முகைதின் ஜும்மா பள்ளி பரிபாலன சபையும் ஒன்றிணைந்து மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னண்டோவுக்கு வரவேற்பளிக்கும். (க)

## கச்சதீவுசெல்வோர்

(மன்னார்)

இம்முறை மன்னார் பகுதியில் இருந்து கச்சதீவுக்குச் செல்வோர் தலைமன்னார்துறைமுகத்திலிருந்து மட்டும் செல்லலாம் என்றும் கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் சென்றவருடம் கடைப்பிடித்த நிபந்தனைகளையே இம்முறையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள சீர்படுத்தல் தொடர்பான விசாரணைகளை மன்னார் காணி அதிகாரிகள் நடத்தி வருகின்றனர்.

தற்போதுமன்னார், மாந்தை, நானாட்டான் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இவ்விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## தங்கச்சங்கிலி கொள்ளை

(பண்டத்தரிப்பு)

வீட்டிலுள்ள வயோதிப மாது ஒருவரிடம் மோர் கேட்ட நபா ஒருவர் அவரிடமிருந்த நாலரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பண்ணாகத்தில் நடைபெற்ற இத்துணிகர சம்பவம் பற்றி சிவக்கொழுந்து என்பவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிசார் சந்தேக நபரை தேடிவருகின்றனர்.

## சிரமதானமூலம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கோவில்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மானிப்பாய் பிட்பிலி மயானத்தை சிரமதானமூலம் புனரமைப்புச் செய்துள்ளனர்.

பற்றைகளும், முட்புதர்களும் நிறைந்திருந்த இந்த மயானத்தை மானிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், முன்னாள் மானிப்பாய் பட்டினசபைத் தலைவருமான சட்டத்தரணி திரு. சி. இராஜேந்திரம் தலைமையில் உறுப்பினர்கள் சிரமதானமூலம் துப்புரவுசெய்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வீடியோ' கழகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் 'வீடியோ' கழகத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம், நேற்று முன்தினம் யாழ் நகரில் திரு. கே. தவராஜ் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண யாவட்டத்தின் இருபதுக்கும் அதிகமான 'வீடியோ' உரிமையாளர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன:

''கழகத்தின் உபவிதிகளைத் தயாரிப்பதற்கு ஐவர்கொண்ட உபகுழு தெரிவுசெய்யப்பட்டது.''

தற்பொழுது சாதாரண பொதுமக்கள் 'வீடியோ' டெலிவிஷன் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை தடை செய்யும் வகையில் மாநகர சபை அதிகாரிகளும் பொலிசாரும் எடுத்துவரும் நடவடிக்கைகள் சம்பந்தமாக இக்கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அமைச்சரையும் அதிகாரிகளையும் சந்திப்பதெனவும் இதுசம்பந்தமாகச் சகல நடவடிக்கைகள் எடுப்பதற்கு மூவர் கொண்ட உபகுழுவும் நியமிக்கப்பட்டது.

'வீடியோ' காட்சிகளையும் மதுரை டெலிவிஷன் காட்சிகளையும் பொதுமக்கள் யாழ் நகர் பூங்காவில் பார்த்து மகிழ்ந்ததை நினைவுபடுத்தி, இந்நிலையை மீண்டும்யாழ்நகர் வீடியோ கழகத்தின் மூலம் நிலைநாட்டுவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

'கொழும்பு வீடியோ கழகத்தினதும், தனிப்பட்ட தாபனங்களினதும் உதவியையும் ஆலோசனையையும் பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

''தற்போது எதிர்நோக்கும் பிரச்னைகள் தீர்க்கப்படும்வரை வாரந்தோறும் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.'' (கொ)

## பதவிஉயர்வுடன் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநலச் சேவை நிலைய வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். படிகலிங்கம் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கிரான் கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தராகப் பதவிஉயர்வுடன் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

உடுவில் கமநலச்சேவைப் பிரதேசத்திலுள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் நிலைய ஊழியர்களும் திரு. படிகலிங்கத்திற்குசேவைநலம்பாராட்டு வைபவம் ஒன்றை நடாத்தினார்கள். (அ)

## மனைவி ஏசினாராம் கணவன் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

மனைவி ஏசியதால் மனம் உடைந்த கணவன், நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கொக்குவிலில் உள்ள நந்தாவிலில் நிகழ்ந்துள்ளது.

இவரது மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் நடத்தியபோது மரணமான பொன்னு தில்லையம்பலம் (37 வயது) மது அருந்தும் பழக்கம் உடையவர் என்றும் இவருக்கு 4 பிள்ளைகள் உண்டென்றும் இவர் சம்பாதிக்கும் பணத்தில் மது அருந்திவிடுவதால் குடும்பம் மிகவும் கஷ்ட நிலையில் இருந்துவந்ததுஎன்று சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினமும் இவர் மது அருந்திவிட்டு மாலை வீட்டிற்கு வந்தபோது மனைவி வீட்டுச் செலவுக்குப் பணம்கேட்டாராம். குடித்துவிட்டு மீதியாக வைத்திருந்த 5 ரூபாவை மனைவியிடம் கொடுத்தபோது ''இந்த5 ரூபாவை வைத்து என்ன செய்வது? குடிக்கமட்டும் காசிருக்கு, வீட்டுச்செலவுக்குத் தரமட்டும் காசில்லை'' என்று மனைவி பேசினாராம். கடிந்து கொண்டாரம். மனைவி பேசியதால் மனமுடைந்த கணவன் தான் தந்த பணத்தைத் தரும்படி திருப்பிக் கேட்டபோது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாம்.

''பேசிப்போட்டாய், என்ன செய்கிறேன் பார்'' என்றுகூறி கிருமிநாசினி அருந்தினாராம்.

மரண விசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கொ]

## இன்று சதுர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் இன்று செவ்வாய் மாலை சதுர்த்தி விழா விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். (கொ)

மட்டு நூலகத்துக்கு

## யாழ். மாணவர் வழங்கிய நூல்கள் எங்கே?

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் மட்டக்களப்பு பொதுநூல் நிலையத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்கள் மறைந்து விட்டதாகப் புகார் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான பொதுநூல் நிலையத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர்களால் க. பொ. த. (உயர்தர) வகுப்பு பாடங்கள் சம்பந்தமான புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இப்புத்தகங்களின் பெறுமதி பல ஆயிரம் ரூபாய் ஆகும்.

இப்புத்தகங்களில், சில புத்தகங்கள் மட்டுமே மாணவர்களின் உபயோகத்துக்கு நூல் நிலைய படிப்பு மண்டபத்தில் கிடைக்கிறது இவற்றில் சில முக்கியமான புத்தகங்கள் போடவில்லை. இதனையிட்டு பலரும் முறைப்பாடு செய்த வண்ணம் உள்ளனர்.

இது சம்பந்தமாய் கடந்த வராம் மட்டக்களப்பிற்கு தனிப்பட்ட காரணத்திற்கு வந்திருந்த யாழ் வளாக முன்னாள் மாணவ பேரவைத் தலைவர் திரு. ரி. தெய்வேந்திராவிடம் மாணவர்கள் எடுத்துக் கூறினர்.

திரு.தெய்வேந்திரா மாநகர சபை ஆணையாளரிடம் இது பற்றி எடுத்துக் கூறியதாக அறியப்படுகின்றது.

## மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள துன்னாலை கொடிக்கட்டுக் கிராமத்தில் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முப்பது வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீடுகளை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளை இம்மாத இறுதிக்குள் யாழ்.தேசிய வீடமைப்பு அதிகாரசபை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலக்கியத் தொகுப்பு நூல்

(யாழ்ப்பாணம்)

காவலூர் எஸ். ஜெகநாதனின் பல்வேறு ஆக்கங்கள் அடங்கிய இலக்கியத் தொகுப்பு நூல் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படவிருக்கிறது.

காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் கொழும்பில் நடைபெறும் இவ்விழாவில் மன்னார் எம். பி. திரு. பி. எல். சூசைதாசன் சிறப்புரையாற்றுவார். பிரபல விமர்சகர்கள் நூலை விமர்சித்துப் பேசுவர்.

திரு. ஜெகநாதனின் 20 சிறுவர் சிறுகதைகளின் தொகுப்பான 'வானத்து நிலவு' நூல் இவ்விழாவில் அறிமுகம் செய்து வைக்கப்படும். (அ)

## இளம்பெண் தற்கொலை

(மன்னார்)

பலவருடமாக நெஞ்சு வலியால் அவதியுற்ற இளம் யுவதி கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

முருங்கனைச்சேர்ந்த பொன் தீவுக்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த அற்புதம் என்ற இளம் யுவதியின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

நெஞ்சு வலி தாங்கமுடியாததால் வீட்டில் வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினியை அருந்திவிட்டார் என்றும் கிருமிநாசினி அருந்தியவரை முருங்கன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது இடைவழியிலேயே அவர் இறந்து விட்டார் என்றும் கூறப்பட்டது.

மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. என் நாகராசா தற்கொலை மரணம் என தீர்ப்பளித்தார் (க)

## கருத்தரங்கு

(புலோலி)

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள துன்னாலை வடக்கு அல்லையம்பதிக் கிராமத்தில் கிராம அபிவிருத்தி, கைத்தொழிற்றுறை முன்னேற்றம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அல்லையம்பதிக் கிராம அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டுவருகின்றது.

இதற்கிணங்க, இக்கிராம அபிவிருத்தி பற்றிய ஆய்வும், கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளதாகவும், இக்கருத்தரங்கில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மூ. தம்பிமுத்து ஆகியோரும், கிராம அபிவிருத்தி அதிகாரிகளும் கலந்துகொள்வார்களென அல்லையம்பதிக் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். செந்துராசா தெரிவித்தார். (க)

## தேநீர் விலை அதிகரிப்பு

(மன்னார்)

சீனி விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பேசாலையில் 25 சதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த தேநீர் விலை 10 சதத்தால் உயர்ந்துள்ளது. தற்போது ஒரு தேநீர் 40 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (க)

## மீண்டும் வருவேன்...

(1-ம் பக்கத்] தொடர்ச்சி)

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் இந்திராகாங்கிரசும், தி. மு. கழகமும், முஸ்லிம் லீக்கும், பார்வேர்ட்புளக்கும் தொகுதி உடன்பாடு செய்து, போட்டியிடும். ஏற்கனவே நாம் செய்துகொண்ட தேர்தல் உடன்பாடு தொடர்ந்து நீடிக்கும். இது சம்பந்தமாக நான் டில்லியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் விரிவான முறையில் பேச்சுக்கள் நடத்தி சில முடிவுகளும் எடுத்துள்ளோம். அந்த நல்ல முடிவுகளை பிறிதொரு நேரத்தில் நான் வெளியிடுவேன். எங்களுக்குள் தொகுதிகளைப் பகிர்ந்துகொள்வதில் எந்தவிதக் கஷ்டமும் ஏற்படாது. இதனை உறுதியாக நான் சொல்லுகின்றேன். விரைவில் தி. மு. க. செயற்குழுவும் பொதுக்குழுவும் கூடவிருக்கின்றன. இக் குழுக்கள், சட்டசபை தேர்தல் சம்பந்தமான பல முடிவுகளை எடுக்கும்'' என்று கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்,

## தமிழ்நாட்டில் கலவரம்

தமிழ்நாடு சட்டசபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று [illegible] வன்செயல்கள், கலவரங்கள் இடம்பெற்றன. நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூரில் திருப்பூர் எனும் கிராமத்தில் தபால் நிலையமொன்று நேற்று தீவைக்கப்பட்டது. ஆனால் தீ உடனடியாக அணைக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் எதிரொலியாக இங்கு கடைகள் திறக்கப்படவில்லை. பஸ்கள் ஓடவில்லை. ஜன நடமாட்டமும் மிகவும் குறைந்திருந்தது.

## ஆளுநர் நடத்திய மகாநாடு

நேற்று தமிழக சட்டசபை கலைக்கப்பட்டு ராஷ்டிரபதி ஆட்சி அமுலுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி முதன்முதலாக நடத்திய செய்தியாளர் மகாநாட்டில், மதுவிலக்குக் கொள்கை சம்பந்தமாக முன்னைய அ. இ. அ. தி. மு. க. அரசு நிறைவேற்றிய தீர்மானமொன்று உடனடியாக நிறுத்திவைக்கப்படுவதாக தகவல் வெளியிட்டார்,

அ. இ. அ. தி. மு. கழக அரசு மதுவிலக்கை சற்றுத்தளர்த்தியிருந்தது. இந்த முடிவு உடனடியாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுதடன், தமிழ்நாட்டில் முன்னர்போல் மது விலக்குக் கொள்கை தொடர்ந்து அமுலில் இருக்கும். மதுபான பர்மிட்டுகள் வழங்குவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன்'' என்று தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

## கலைப்புக்குக் காரணம்

இந்திய சட்ட அமைச்சர் திரு. பி. சிவசங்கர் நேற்று நிருபர்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில் ''ஒன்பது மாநிலங்களின் சட்ட சபைகளும் கலைக்கப்பட்டதற்கு காரணம் இல்லாமல் இல்லை. மத்திய அரசுடன் இந்த மாநில அரசுகள் ஒத்துழைக்காத காரணத்தினாலேயே சட்ட சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. ஒத்துழையாமை மனப்போக்கு நீடித்தால் சரியான முறையில் மத்தியில் ஆட்சி நடத்த முடியாது'' என்று கூறினார்.

## எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

ஆந்திரப் பிரதேச சட்டசபையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர்! இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத ஒன்பது மாநில சட்டசபைகளை அரசு கலைத்தமை குறித்து பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்வத்துரை

தெல்லிப்பழை ஆயுர்வேத வைத்தியரும் முன்னாள் ஆயுர்வேதக் கல்லூரி விரிவுரையாளருமான கந்தையா செல்வத்துரை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை 19-2-80 மாலை 5 மணிக்கு தெல்லிப்பழை இத்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 5005

## மரண அறிவித்தல்

### இராஜரத்தினம் தவராஜசூரியர்

சுன்னாகம் ஆசிரியர் தவராஜசூரியர் காலமானார். இவர் குலமணியின் அன்புக் கணவரும், பாலரஞ்சன், சூரியகுமார் (சட்டத்தரணி), சூரியகுமாரி, ஜெயந்திமாலா, அசோக்குமார், டிலிப்குமார், ராஜ்குமாரி, கலைக்குமார், சியாமளா ஆகியோரின் தந்தையுமாவார். பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (19-2-80) மாலை 4-30 மணியளவில் உடுவில் சேமக்காலைக்கு, சுன்னாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

5004 த. சூரியகுமார், சட்டத்தரணி.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GB/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org